# 2022

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# Annual Report



## කිතුල් සංවර්ධන මණ්ඩලය

## கித்துல் அபிவிருத்திச் சபை

## Kithul Development Board

වැවිලි සහ ප්‍රජා යටිතල පහසුකම් අමාත්‍යාංශය

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

Ministry of Plantation and Community Infrastructure

# ஆண்டறிக்கை
# 2022

# ஆண்டறிக்கை 2022

## உள்ளடக்கம்

01. தலைவரின் மீளாய்வு ........ 43

02. பொதுமுகாமையாளரின் மீளாய்வு ........ 44

03. பணிப்பாளர் சபையின் மீளாய்வு ........ 45

04. கித்துல் அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை ........ 45

05. நிறைவேற்று முகாமைத்துவக் குழு ........ 46

06. நிறுவனத் தகவல்கள் ........ 46

6.1 நிறுவனக் கட்டமைப்பு ........ 47

6.2 நிறுவனத்தின் நோக்கம் ........ 48

6.3 நிறுவனத்தின் அதிகாரம் ........ 49

6.4 பிரதான பணிகள் ........ 50

6.5 நிறுவனக் கட்டுப்பாடு ........ 52

07. தற்போதைய வளங்கள் ........ 53

7.1 வரலாற்றுப் பெறுமானம் ........ 53

7.2 தற்போதைய பெறுமானம் ........ 53

7.3 உள்ள பலம், பலவீனம் மற்றும் அச்சுறுத்தல்கள் ........ 54

7.4 விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2022.12.31 திகதிக்கு) ........ 56

7.5 கித்துல் சர்க்கரை மற்றும் பாணி ஏற்றுமதி ........ 58

08. கித்துல் அபிவிருத்தி சபையினால் 2022 ஆம் ஆண்டு பூர்த்தி செய்த கருத்திட்டங்கள் ........ 61

8.1 மூலோபாயத் திட்டங்களைத் தயாரித்தல். ........ 61

8.2 மூலோபாயத் திட்டத்தை கௌரவ ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தல்.. ........ 63

8.3 குடிசைக் கைத்தொழிலுக்காக பாதுகாப்பு உபகரணக் கருவிகளை வழங்குதல். ........ 67

8.4 கித்துல் விவசாய சங்கங்களை அமைத்தல். ........ 68

8.5 கித்துல் சுற்றுலா விருந்தோம்பல் கிராமம் (லங்கா கம) ........ 73

8.6 உயர் தரத்தில் கித்துல் உற்பத்தியை விற்பனை செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப தலையீடுகள் ........ 75

8.7 கித்துல் மரங்களை அதிகரிப்பதற்காக நாற்று அபிவிருத்தி மற்றும் கித்துல் செய்கையை நாட்டினுள் வணிக நடவடிக்கையாக மாற்றியமைத்தல் ........ 76

09. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ........ 78

10. நிதி அறிக்கைகள் .......... 84
10.1 நிதி நிலை அறிக்கை .......... 84
10.2 நிதி செயல்திறன் .......... 85
10.3 பணப்புழக்க அறிக்கை .......... 86
10.4 சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் .......... 87
10.5 குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் .......... 88
11. தேசிய கணக்காய்வுஅறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பலவீனங்களை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் .......... 91

## 01. தலைவரின் மீளாய்வு

கித்துல் செய்கையானது ஆசியப் பிராந்தியத்தின் பல நாடுகளில் காணப்படும் ஒரு தாவரமாக இருந்தாலும், அதனுடன் தொடர்புடைய குடிசைக் கைத்தொழில்கள் காணப்படுவது இலங்கையில் மட்டுமே. 2021 மார்ச் 17 ஆம் திகதிய 2219/37 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பட்ட கித்துல் அபிவிருத்தி சபையின் தலைவராக நான் நியமிக்கப்பட்டு, அதன் செயற்பாட்டுக்காக ஒரு பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டு, அரச நியதிச்சட்ட சபையாக செயற்படுவதற்குத் தேவையான நடைமுறைகளை தயாரித்து, தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர் அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய தொழிற்சாலைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. கித்துல் பாணி மற்றும் சர்க்கரை உற்பத்தி தொடர்பான வரலாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாக இருந்தாலும், தற்போது கூட அந்தத் தொழில் ஆரவாரம் இல்லாத குடிசைக் கைத்தொழிலாகவே இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

கௌரவ ஜனாதிபதி அவர்களின் விசேட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பெருந்தோட்ட அமைச்சின் தலையீட்டுடன் நிறுவப்பட்ட இந்த சபைக்கு கித்துல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரை அடையாளம் கண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் நிலவும் புதிய போக்குகளை அடையாளம் கண்டு, வறுமை நிலையில் வாழும் பாரம்பரிய கைத்தொழிலாளர்களின் நிலையிலிருந்து மீட்டெடுத்து, நவீன தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி, கித்துல் உற்பத்திகளில் உள்ள உண்மையான பண்புகளைப் பாதுகாத்து, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் உற்பத்தி பன்முகப்படுத்தலில் திறமை பெற்ற தொழில் முனைவோராக இலங்கை சமூக மட்டத்தில் உயர்த்துவதற்குத் தேவையான உத்திகளை அடையாளம் கண்டு செயல்படுத்துவது கித்துல் அபிவிருத்தி சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பு என்பதை நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்.

இந்த சவாலான பயணத்தில் சாதனையைக் காட்டி, வெற்றிகரமாக செயல்படுவதற்கு பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ ரமேஷ் பதிரண அவர்களிடமிருந்து கிடைக்கும் வழிகாட்டல் மற்றும் நேரொத்த அமைச்சுகள் மற்றும் அரச அமைச்சுகளின் செயலாளர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு பெரும் ஆதரவை வழங்கும்.

கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி காலியில் நடைபெறும் கித்துல் அபிவிருத்தி சபையின் தூரநோக்கை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியானது, நிலவும் சவால்கள் அனைத்தையும் வெற்றிகொண்டு இலங்கையின் தனித்துவத்தை பிரதிபலிக்கக்கூடிய கித்துல் உற்பத்திகளை உள்நாட்டு சந்தை மற்றும் ஏற்றுமதி சந்தை வரை மேம்படுத்தி, அதன் மூலம் வாழ்வாதாரம் பெறும் மக்களுக்கு நன்மை பயக்கும் நல்ல ஆரம்பத்தைக் குறித்துள்ளது.

அதற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிஹான் பெரேரா (சட்டத்தரணி)

தலைவர் கித்துல் அபிவிருத்தி சபை

## 02. பொதுமுகாமையாளரின் மீளாய்வு

முதலில் கித்துல் அபிவிருத்தி சபையின் 2022 ஆம் ஆண்டின் செயல்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய அனைவருக்கும் எமது பணிவான பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம். அவ்வாறே 2021 ஆம் ஆண்டு கித்துல் அபிவிருத்தி சபையை நிறுவுவதற்கு பெருந்தோட்டத்துறை அமைச்சர் கௌரவ டாக்டர் ரமேஷ் பதிரண அவர்கள் காட்டிய அருமையான தலைமைத்துவத்திற்காக எமது இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம், மேலும் எமது பணிகளை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர் வழங்கும் நிலையான தலைமைத்துவம் மற்றும் ஊக்குவிப்பு மகத்தான பலமாக உள்ளது என்பதை குறிப்பிடுகிறோம். கித்துல் அபிவிருத்தி சபையின் செயற்பாடுகளுக்காக பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே அவர்கள் காட்டும் பங்களிப்புக்காகவும் எமது பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகிறோம்.

பணிப்பாளர் சபையின் தொடர்ச்சியான வழிகாட்டல்கள், பரிந்துரைகள் மற்றும் ஊக்குவிப்புகள் மிகவும் முக்கியமானவை என்பதுடன், பணிப்பாளர் சபையின் வழிகாட்டலுக்காக நன்றியை தெரிவிக்கிறேன்.

தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் அருமையான ஒத்துழைப்பை மிகவும் மதிப்பிடுகிறேன். இங்கே கித்துல் துறையில் ஆர்வம் காட்டும் வெளித் தரப்பினர் வழங்கிய பயனுள்ள பங்களிப்புகள், எமது நிறுவன கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை தயாரிப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் மிகவும் உதவியாக இருந்துள்ளன.

இந்த ஆண்டறிக்கை மூலம் 2022 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டத்தின்படி பயனுள்ள முறையில் இலங்கை கித்துல் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கும் அது நாட்டிற்கு நிலையான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருவதற்கும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மீளாய்வு செய்யப்படும். மீண்டும் ஒருமுறை இந்த முயற்சிக்கு எமக்கு உதவிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

ஷிராணி வீரகோன்
பொது முகாமையாளர்
கித்துல் அபிவிருத்தி சபை

## 03. பணிப்பாளர் சபையின் மீளாய்வு

இதற்கு முன்பு கித்துல் தொடர்பான உற்பத்திகள் மற்றும் விற்பனை மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட சட்டரீதியான நிறுவனம் ஒன்று இலங்கையில் இல்லாத நிலையில், 2021 மார்ச் 17 ஆம் திகதியம் 2219/37 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பட்ட கித்துல் அபிவிருத்தி சபை கித்துல் தொழில் முனைவோரின் முன்னேற்றத்திற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட முதல் மற்றும் ஒரே நிறுவனமாகும். உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கித்துல் உற்பத்திகளுக்கு தற்போது நிலவும் தேவையை உயர்த்துவதன் மூலம் இந்நாட்டிற்கு வரும் வருமானத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கு கித்துல் தொழிலுக்கு திறன் உள்ளது என்று நாம் உறுதியாக நம்புகிறோம். எமது இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக தொழில் முனைவோரின் வலுவான பங்களிப்பைப் பெறுவதில் கவனம் செலுத்துவதை எதிர்பார்க்கிறோம். தெற்காசிய நாடுகள் சிலவற்றில் கித்துல் மரங்கள் காணப்பட்டாலும் அதில் காணப்படாத சிறப்பியல்பு ஒன்று இலங்கையின் கித்துல் மரங்களில் உள்ளது என்பதை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதில் உள்ள இந்த சிறப்பியல்பை பயன்படுத்தி புதிய பெறுமதி சேர் உற்பத்திகள் மூலம் சர்வதேச சந்தையில் நுழைவதற்கான சாதகமான அணுகுமுறையை பெறலாம் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

## 04. கித்துல் அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை

I. திரு. கிஹான் பெரேரா (சட்டத்தரணி) - தலைவர்
II. கலாநிதி (திரு) ரவீந்திர கே. விதானாச்சி - உறுப்பினர்
III. கலாநிதி (திரு) பீ. ரணசிங்க - உறுப்பினர்
IV. திரு. உதய பிரிமால் பெர்ணாந்து - உறுப்பினர்
V. திருமதி. பீ.டீ. தாபரே - உறுப்பினர்
VI. திருமதி. கே.கே.எஸ்.ஆர். தயாரத்ன - உறுப்பினர்

| பதவி | பெயர் | தொலைபேசி இல | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| தலைவர் | திரு. கிஹான் பெரேரா (சட்டத்தரணி) | 0774729108 | chairmankdb@gmail.com |
| உறுப்பினர் | திரு. கலாநிதி (திரு) ரவீந்திர கே. விதானாச்சி | 0713567935 | raveendra@gmail.com<br>raveendra.pre@gmail.com |
| உறுப்பினர் | கலாநிதி (திரு) பீ. ரணசிங்க | 0714434767 | pathmasiri@iti.lk<br>pathmasiriranasingha@yahoo.com |
| உறுப்பினர் | திரு. உதய பிரிமால் பெர்ணாந்து | 0773530735 | udaya.primal@yahoo.com |
| உறுப்பினர் | திருமதி. பீ.டீ. தாபரே | 0714488286 | dabaredharshani@yahoo.com |
| உறுப்பினர் | திருமதி. கே.கே.எஸ்.ஆர். தயாரத்ன | 0712174016 | kkshiranthi81@yahoo.com |

## 05. நிறைவேற்று முகாமைத்துவக் குழு

| பதவி | பெயர் | கைத்தொலைபேசி இல | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| பொதுமுகாமையாளர் | திருமதி. ஷிரானி வீரக்கோன் | 0777844001 | shirani101@gmail.com |
| முகாமையாளர் | திரு. ஏ.எச்.என். சிந்தக | 0766995035 | ncaluthwalahewa@gmail.com |
| பிரதி முகாமையாளர் (நிதி) | திரு. எஸ்.சீ.எஸ். பெர்ணாந்து | 0714446503 | champika1980june@gmail.com |
| பிரதி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திருமதி. கே.ஏ.ஜீ. தில்ருக்ஷி | 0714422305 | dilrukshi76@yahoo.com |

## 06. நிறுவனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கித்துல் அபிவிருத்தி சபை |
| சட்டக் கட்டமைப்பு | : | 2021 மார்ச்சு17 இலக்கம் 2219/37 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் |
| ஆரம்ப ஆண்டு | : | 2021 |
| பதவி அலுவலக முகவரி | : | இல 239/1, கந்தவத்த வீதி, பெலவத்த, பத்தரமுல்ல. |
| தொலைபேசி இல | : | 0112784638 |
| மின்னஞ்சல் முகவரி | : | genkdb@gmail.com<br>chairmankdb@gmail.com |
| கணக்காய்வு அலுவல்கள் | : | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உள்ளக கணக்காய்வு கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம். |
| சட்ட ஆலோசனை | : | சட்டமா அதிபர் திணைக்களம் |
| வங்கி | : | இலங்கை வங்கி |

## 6.1 நிறுவனக் கட்டமைப்பு



## 6.2 நிறுவனத்தின் நோக்கம்

1. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளில் விலை மற்றும் தர தரநிலைகளை ஒழுங்குபடுத்துதல்.
2. தொழிற்துறையின் சீரான செயல்பாட்டிற்கு பாதகமாக பாதிக்கும் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை சீர்திருத்துதல்.
3. மதிப்புச் சங்கிலி அணுகுமுறையின் மூலம் உற்பத்திகளுக்கு ஆதரவளிப்பதற்காக பாரிய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களை இணைத்தல்.
4. தொழில் முனைவோர் மேம்பாட்டின் மூலம் பாரம்பரிய தொழில்துறை மனநிலையிலிருந்து வணிக மனநிலை வரை கலாசார மாற்றத்தை ஏற்படுத்துதல்.
5. சமூக மேம்பாட்டின் மூலம் சமூகத்தின் கூட்டு பங்கேற்பை ஒழுங்கமைத்தல்.
6. தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் திறனை அதிகரிப்பதற்காக சரியான செய்கை நடைமுறைகள் மற்றும் உற்பத்தி செயல்முறைகளுடன் தொழிற்துறையை தரப்படுத்துதல்.
7. விளம்பரம் மற்றும் ஊக்குவிப்பு கலை முறைகள் மூலம் புதிய சந்தைகளை அடைதல்.
8. தற்போதுள்ள பொருளாதார வாய்ப்புகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதன் மூலம் கித்துல் உற்பத்தியாளர்களை தொழில்துறையில் தக்கவைத்தல், இளைஞர் பங்கேற்பை அதிகரித்தல் மற்றும் அவர்களது தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல்.
9. சந்தை மற்றும் உற்பத்தி அடிப்படையிலான ஆராய்ச்சியின் அடிப்படையில் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்.
10. தொழில்துறை சமூகத்தை பாராட்டுவதற்காக முறையாக வெகுமதி பொறிமுறையை மேம்படுத்துதல்.
11. கித்துல் செய்கையை விரிவாக்குவதன் மூலம் பசுமை உள்ளடக்கத்தைக் குறைத்தல்.
12. பெண்களை பெறுமதி சேர் உற்பத்தியை நோக்கி திசைதிருப்புவதன் மூலம் பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல்.
13. பொருத்தமான இடைப்பயிர்களை அடையாளம் காண்பதன் மூலம் கித்துல் மரங்கள் கொண்ட நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.



உரு 1 :- கித்துல் பூக்கட்டும் செயற்பாடு

### 6.3 நிறுவனத்தின் அதிகாரம்

1. பதிவு செய்தல்,
    - A. கித்துல் தோட்டங்கள் மற்றும் அந்த தோட்டங்களின் உரிமையாளர்கள்
    - B. கித்துல் உற்பத்தியாளர்கள்
    - C. கித்துல் உற்பத்திகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் ஈடுபடும் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துபவர்கள்
    - D. கித்துல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்பவர்கள்

2. அத்தகைய பதிவுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், நடைமுறை மற்றும் ஆண்டு கட்டணங்கள், அதன் விருப்பப்படி எந்த பெயரையும் பதிவிலிருந்து நீக்குதல் அல்லது மீண்டும் சேர்த்தல் பற்றி முடிவெடுத்தல்.
3. கித்துல் செய்கை செய்யப்படும் நிலங்களை பயன்படுத்துதல் மற்றும் அவற்றை வளர்ப்பதிலும் அந்த நிலங்களில் கித்துல் செய்கையிலும் ஈடுபடுதல், முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வையிடல், பேணுதல், நிர்வகித்தல் மற்றும் பரிசோதனை செய்தல்.
4. கித்துல் உற்பத்திகளை தயாரித்தல், பொதியிடல், சேமித்தல், போக்குவரத்து மற்றும் விற்பனை செய்வதை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வையிடல், பேணுதல், நிர்வகித்தல் மற்றும் பரிசோதனை செய்வதில் ஈடுபடுதல்.
5. தொழிற்சாலைகள், களஞ்சியங்கள், முனையங்கள், கட்டடங்களை பரிசேதனை செய்தல், மேற்பார்வையிடல், ஒழுங்குபடுத்துதல், மற்றும் கட்டுப்படுத்துதல், வளாகங்கள், சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் உற்பத்தியாளருக்கு பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்துவதற்கான கித்துல் உற்பத்திகளை பொதியிடல் அல்லது சேமித்தல்.
6. கித்துல் உற்பத்திகளை கொள்வனவு செய்வதை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வையிடல், வழிகாட்டுதல், நிர்வகித்தல், மற்றும் பரிசோதனை செய்தல், விற்பனைக்கு கித்துல் உற்பத்திகளை எடுத்துச் செல்லல், களஞ்சியப்படுத்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல்.
7. கித்துல் உற்பத்திகளை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக விற்பனை அறைகளை நிறுவுதல் மற்றும் அத்தகைய விற்பனை அறைகளின் நடைமுறையை தீர்மானித்தல், மற்றும் விற்பனை அறைகளில் விற்கப்படும் எந்த உற்பத்தியையும் ஒப்படைத்தல் மற்றும் அதற்கான நடைமுறையை தீர்மானித்தல்.
8. கித்துல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல் மற்றும் அத்தகைய உரிமத்தை வழங்குவதற்கான தகுதிகள், விதிமுறைகள், நிபந்தனைகள், நடைமுறை, மற்றும் அதன் விருப்பப்படி எந்த நபருக்கும் உரிமம் வழங்குவதை மறுத்தல் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்தல் பற்றி முடிவெடுத்தல்.

### 6.4 பிரதான பணிகள்

1. கித்துல் செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு ஆதரவளித்தல்.
2. நிலங்களில் கித்துல் செய்கை செய்தல் மற்றும் கித்துல் செய்கைக்கு உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3. புல் உட்பட பிற பயிர்களுடன் செய்கை செய்வதற்கு ஏற்ற கித்துல் நிலங்களை அடையாளம் காணுதல் மற்றும் அந்த நிலங்களில் இடைப்பயிர் செய்கைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல், பேணுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துவதற்கு ஆதரவளித்தல்.
4. கித்துல் செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களில் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ளுதல் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் மற்றும் முறைப்படுத்துவதற்கு ஆதரவளித்தல்.
5. கித்துல் தோட்டங்களில் கித்துல் மற்றும் பிற பயிர்களை செய்கை செய்வது தொடர்பாக சரியான செய்கை நடைமுறைகள் பற்றி நிர்ணயித்தல், பிரபலப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் பேணுதல்.
6. கித்துல் உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக ஆதரவளித்தல் மற்றும் ஊக்குவித்தல் மற்றும் முறைப்படுத்துதல்.
7. கித்துல் உற்பத்திகளை பதப்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்ப முறைகளை ஊக்குவித்தல்.
8. கித்துல் உற்பத்திகளை தயாரிக்கும் நிறுவனங்களின் திறனை அதிகரிப்பதற்கு ஆதரவளிப்பதற்காக ஒத்துழைத்தல் மற்றும் அவற்றை நவீனமயமாக்குவதை ஊக்குவித்தல் மற்றும் பேணுதல்
9. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் கித்துல் உற்பத்திகளின் தர நிலைகள் பற்றிய தரங்களை நிர்ணயித்தல் மற்றும் பராமரித்தல்.
10. பொதுவாக கித்துல் உற்பத்திகளுக்கு குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச விலைத் திட்டங்கள் மற்றும் விலை நிலைப்படுத்தல் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்காக கித்துல் உற்பத்திகளை வாங்குதல், விற்பனை செய்தல், ஒழுங்குபடுத்துதல், செயல்படுத்துதல், அல்லது ஆதரவளித்தல்.
11. கித்துல் உற்பத்திகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலையை ஒழுங்குபடுத்துதல்.
12. ஊக்குவிப்பு திட்டங்கள் மூலம் இலங்கையில் மற்றும் அதற்கு வெளியே கித்துல் உற்பத்திகளுக்கு தேவையை உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் கண்காட்சிகளுடன் தொடர்புபடுத்தல்.
13. கித்துல் உற்பத்திகளை இலங்கையில் மற்றும் அதற்கு வெளியே எடுத்துச் செல்லல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அனைத்து பிரிவுகளுக்கும் சந்தை ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

14. கித்துல் மரங்களின் வளர்ச்சி மற்றும் செய்கை, பிற பயிர்களை செய்கை செய்தல் மற்றும் கித்துல் தோட்டங்கள் சார்ந்து கால்நடை வளர்ப்பில் ஈடுபடுதல், நோய்கள் மற்றும் பூச்சிகளை தடுத்தல் மற்றும் குணப்படுத்துதல் தொடர்பாக அறிவியல் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.
15. ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி இடங்கள் மற்றும் நாற்றுமேடைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
16. கித்துல் உற்பத்திகளை பதப்படுத்துதல் மற்றும் பயன்பாடு தொடர்பாக அறிவியல் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.
17. கித்துல் உற்பத்திகளை பதப்படுத்துவதற்கான முன்மாதிரி ஆலைகளை நிறுவுதல், பராமரித்தல், மற்றும் பரிசோதனை செயலாக்க உபகரணங்களை தயாரித்தல்.
18. கித்துல் தொழிற்துறைக்கு ஆதரவளிப்பதற்காக ஆலோசனை மற்றும் விரிவாக்க பணியாளர்களை பயிற்றுவித்தல்.
19. தொழில்நுட்ப இயல்புடைய அனைத்து விவகாரங்கள் தொடர்பாகவும் கித்துல் தொழிற்துறைக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
**20.** கித்துல் தோட்டங்களில் அல்லது கித்துல் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் அல்லது வர்த்தகம் செய்யும் நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் உரிமை பற்றிய கூட்டுறவு மற்றும் கூட்டு மாதிரிகளை ஊக்குவித்தல்

## 6.5 நிறுவனக் கட்டுப்பாடு

கௌரவ டாக்டர் ரமேஷ் பதிரண அமைச்சரின் தலைமையில் தேங்காய், கித்துல் மற்றும் பனைச் செய்கை ஊக்குவிப்பு மற்றும் சார்ந்த தொழில்துறை பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் தொடக்க மூலதனமாக 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து கித்துல் தொழிற்துறையின் அபிவிருத்திக்காக தேங்காய் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் 2021.03.17 ஆந் திகதியிட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2219 - 37 மூலம் கித்துல் அபிவிருத்தி சபை நிறுவப்பட்டுள்ளது. நாட்டின் கிராமப்புற பகுதிகளில் நிறுவப்பட்ட வரலாற்று தொழிலாக உள்ள கித்துல் தொழிற்துறையை குடும்ப அடிப்படையிலான கித்துல் தொழிலாக பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து தேசிய கித்துல் அபிவிருத்தி திட்டத்தை இந்த சபை செயல்படுத்தி வருகிறது. கித்துல் அபிவிருத்தி சபையின் கட்டமைப்பாக தலைவர் கிஹான் பெரேரா அவர்களின் தலைமையில் பதவி அதிகாரத்தால் பெருந்தோட்ட அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கித்துல் அபிவிருத்தி சபை, கித்துல் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் புதிய தொழில்நுட்பம் மற்றும் பிற முறைகள் மூலம் உள்நாட்டு ஏற்றுமதி வருவாயை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது உள்ள தரவுகளின்படி தற்போது இந்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 300,000 முதல் 500,000 வரையாகும் மேலும் சில தொழில்முனைவோர் உள்நாட்டு உற்பத்திகளுக்கு அப்பால் சென்று சர்வதேச சந்தைக்கும் கித்துல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றனர்.



**உரு 2 :- கித்துல் பூ**

## 07. தற்போதைய வளங்கள்

### 7.1 வரலாற்றுப் பெறுமானம்

தாவரவியல் ரீதியாக Caryota urens என அழைக்கப்படும், தற்போது குறிப்பாக உணவு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கித்துல் தாவரத்துக்கு 2000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு உள்ளது. வெளிநாட்டவர்களின் இடம்பெயர்வுடன் தேநீர், கோப்பி பானங்கள் தொடங்குவதற்கு முன்பு இலங்கையர் ரணவரா, தேங்காய்ப்பூ போன்ற மருத்துவ பானங்களை சர்க்கரையுடன் குடிப்பதற்கு பழக்கப்பட்டிருந்ததாக கருத்துக்கள் வெளிப்படுகின்றன. அதேபோல் கித்துல் சர்க்கரை மற்றும் பாணி கடந்த காலத்திலிருந்து இனிப்பு வகைகளை தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய கித்துல் நீரை ஆரோக்கிய பானமாக பயன்படுத்துவது கிராமப்புற மக்களிடையே கடந்த காலத்திலிருந்து பிரபலமான விடயமாகும்.

கித்துல் தொழிற்துறை தொடங்கிய காலம் பற்றி தெளிவான தரவுகள் இல்லை என்றாலும் புத்தர் காலத்திலும் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. பௌத்த இலக்கியத்தின்படி புத்தர் இமயமலை காட்டில் தவமிருந்தபோது தாகம் உணர்ந்தார், இதை தேவர்கள் கண்டபோது சக்கர தேவேர் ஒரு மூதாட்டியின் வேடத்தை உருவாக்கி கித்துல் மரத்தின் மலரை வெட்டி அவரது பாத்திரத்தை நிரப்பி மீதியாக வைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கித்துல் தொடர்பான மந்திரங்களிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. கும்ப ஜாதக அட்டுவாவா மற்றும் சப்த நீதி போன்ற பழமையான நூல்களில் கித்துல் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பது அதற்கு சான்றாக கருதலாம். பாலி மொழியில் "ஹிந்தால" என்று அழைக்கப்படுவது கித்துல் செடியாகும்.

அதேபோல் கிதுல் என்று பௌத்த இலக்கியத்தில் குறிப்பிடப்படுவதும் கித்துல் தாவரத்தையேயாகும். கிடைத்துள்ள சான்றுகளின்படி கி.மு. 116 க்கு சொந்தமான காலத்தில் கித்துல் தாவரம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய அரசர்கள் ஒரு போரை வெற்றி பெற்ற பிறகு அதை கொண்டாடுவதற்கு கித்துல் இலைகளை அணிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மகா பராக்ரமபாகு மன்னரின் தோட்டங்களில் கித்துல் தாவரம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 7.2 தற்போதைய பெறுமானம்

தற்போது இலங்கை அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் நகர அபிவிருத்திக்கு எந்த அளவு கவனம் செலுத்தப்படுகிறதோ அதே அளவு கவனம் கிராமிய அபிவிருத்திக்கும் செலுத்தப்பட்டுள்ளது. கித்துல் கைத்தொழில் என்பது கிராமிய அளவில் அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு தொழிலாகும், மேலும் அதன் மூலம் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான சாத்தியம் உள்ளது என்பது கடந்த காலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் அனுபவங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், கித்துல் தொழிலின் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டபோது, ஓரளவு முன்னேற்றமடைந்த கிராமியத் தொழிலாகவோ அல்லது சுயதொழிலாகவோ உள்ளது பரவலாக விரிவடைந்திருப்பதைக் காணமுடியவில்லை. குறிப்பாக கித்துல் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அவ்வப்போது பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட

போதிலும், நீண்டகாலமாகவும் நிலையானதாகவும் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் நடைமுறை அளவில் போதுமான பங்களிப்பை வழங்கவில்லை.



உரு 3 :- வெட்டப்பட்ட கித்துல் பூ

பல்வேறு திட்டங்கள் மூலம் தொழில்நுட்பமும் அறிவும் வழங்கப்பட்ட போதிலும், அது தொடர்பான பின்தொடர்தல் இல்லாததால், கித்துல் விவசாயிகள் பெயரளவில் திட்டங்களுடன் இணைந்திருந்தனர், ஆனால் அந்த அறிவைத் தமது தொழிலின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தவில்லை .கித்துல் தொழிலின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் சட்ட நிலைமைகளைத் தளர்த்தியிருந்த போதிலும், அது நடைமுறை மட்டத்தில் செயல்படுத்தப்படாததால் கித்துல் தொழிலாளர்கள் இந்தத் தொழிலிலிருந்து விலகிச் சென்றுள்ளனர் .கித்துல் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக கடந்த காலங்களில் அவ்வப்போது கவனம் செலுத்தப்பட்ட போதிலும், அது பாரம்பரிய முறையில் ஒரு அமைச்சின் ஒரு திட்டமாக மட்டுமே மாற்றப்பட்டது.

கிராமியத் தொழிலாக உள்ள இத்துறையை அதற்கு அப்பால் கொண்டு சென்று, தொழில் முனைவோர் அறிவின் மூலம் பலப்படுத்தப்பட்ட வியாபாரமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்ததன் காரணமாகவே, கித்துல் தொழிலின் அபிவிருத்திக்காக செயல்படுவதற்கு தனியான நிறுவனமாக கித்துல் அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. இது கித்துல் தொழிலின் புதிய தொடக்கத்தை குறிக்கும் ஒன்றாக அடையாளம் காணலாம்.

## 7.3 உள்ள பலம், பலவீனம் மற்றும் அச்சுறுத்தல்கள்

கித்துல் தொழிலை தேசிய வருமானத்திற்கும் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிக்கக்கூடிய தொழிலாக முன்னேற்றுவது இந்த சபையின் முக்கிய நோக்கமாகும் . அதில் கித்துல் தொழிலுடன் நேரடியாக தொடர்புடையவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக கித்துல் தொழில் தொடர்பான வியாபாரங்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றனகுறிப்பாக சுற்றாடல் நட்பு துறையாக கித்துல் தொழில் இலங்கைக்கு தனித்துவமானது என்பதால், கித்துல் அபிவிருத்தி சபையின் அடிப்படைப் பணியானது, நாட்டின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும், நிலையான இருப்பை உறுதிப்படுத்தும் உள்நாட்டுத் தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான குறுகிய கால மற்றும் நீண்ட கால உபாய வழிகளை அடையாளம் காண்பதாகும்கித்துல் அபிவிருத்தி சபையை ஒரு நிறுவனமாக . நிறுவும்போது கித்துல் தொழில் பற்றிய பகுப்பாய்வை மேற்கொள்வதற்கு 2022 ஜனவரி மாதம் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் விளைவாக, அதன் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்வதற்காக பின்வருமாறு ஒரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

1. **பலம்**

I. உற்பத்திப் பொருட்களின் தனித்துவமான மற்றும் உண்மையான மதிப்பு
II. பாரம்பரிய முறைகளின் பயன்பாடு
III. இலங்கை முழுவதும் பரவலான விரிவாக்கம்
IV. சந்தை சாத்தியக்கூறு
V. நன்மை பயக்கும் சுகாதார நிலை/ஊட்டச்சத்து கூறுகள் உள்ளடங்கியிருத்தல்
VI. பகுதி நேர வேலை வாய்ப்புகள்
VII. பல்வகைப்படுத்தப்பட்ட உற்பத்தி திறன்
VIII. சுற்றாடல் நட்புத் தன்மை

2. **பலவீனம்**

I. தொழில்நுட்ப முறைகளின் பயன்பாட்டில் உள்ள வரம்புகள்
II. குறைந்த சமூக ஏற்புத்தன்மை
III. சேதனச் செய்கை பிரபலமாக இல்லாதிருத்தல்
IV. தொடர்புடைய நிறுவனங்களிடையே பலவீனமான ஒருங்கிணைப்பு
V. தொழில் தொடர்பாக உள்ள இடர்பாடு
VI. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பலவீனங்கள்

3. **வாய்ப்புகள்**

I. அரசாங்கத்தின் தலையீடு மற்றும் கித்துல் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு கித்துல் அபிவிருத்தி சபையை நிறுவுதல்
II. சுகாதார நன்மைகள் இருத்தல்
III. பெறுமதி சேர் தொழிலாக முன்னேற்றுவதற்கான சாத்தியக்கூறு
IV. பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைத்தல் (ஆயுர்வேதம், கைவினைப்பொருட்கள், ஆற்றல் போன்றவை)
V. சுகாதாரமான வாழ்க்கைக்கான பொது ஆர்வம் வளர்ச்சியடைதல்
VI. உலகப் புகழ்பெற்ற மேபிள் பாணியுடன் ஒப்பிடுவதற்கான சாத்தியக்கூறு
VII. சுயதொழில் வாய்ப்புகள் அதிகரித்தல்
VIII. வெளிநாட்டு சந்தைக்கு நுழைவதற்கான சாத்தியக்கூறு

4. **அச்சுறுத்தல்கள்**

I. நகரமயமாக்கல்
II. மாற்று மற்றும் போட்டிப் பொருட்கள்
III. இயற்கையான கித்துல் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் போலி உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த போக்கு
IV. கித்துல் தொழிலாக அறிமுகப்படுத்துவதில் உள்ள பாதுகாப்பற்ற தன்மை
V. இளைஞர்கள் ஈர்க்கப்படாமல் இருத்தல் மற்றும் அவர்கள் தொழிலிலிருந்து விலகுதல்
VI. குறைந்த சமூக ஏற்புத்தன்மை
VII. கித்துல் செய்கைக்கு எடுக்கும் காலம்

## 7.4 விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2022.12.31 திகதிக்கு)

வரவு செலவுத் திட்ட உரையின் மூலம் கிடைக்கின்ற நேரடி ஒதுக்கீட்டின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்.

அட்டவணை 1 :- விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2022.12.31 ஆந் திகதிக்கு)

| கருத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| நடைமுறைப்படுத்தும் நிறுவனம் – கித்துல் அபிவிருத்தி சபை | | | |
| 2021 ஆண்டில் இராஜாங்க அமைச்சினால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான பற்றுச்சீட்டுகளை செலுத்துதல். நிலுவைப் பற்றுச்சீட்டுகள் செலுத்தப்பட்டுள்ளன. | 44.34 | 44.34 | ▪ நிலுவைப் பற்றுச்சீட்டுகள் செலுத்தப்பட்டுள்ளன. |
| கித்துல் அபிவிருத்தி சபையை அதிகாரபூர்வமாக தொடங்குதல். | 4.20 | 4.12 | ▪ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| எதிர்கால சவால்கள் மற்றும் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு கித்துல் துறையின் நிர்வாக நிலையை புதுப்பித்தல். | 0.17 | 0.15 | ▪ கித்துல் துறையின் எதிர்கால பயணம் மற்றும் மூலோபாய திட்டத்தை தயாரித்தல் 100% நிறைவு செய்தல். |
| கித்துல் விவசாயிகள் சங்கங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பலப்படுத்துதல். | 3.80 | 1.83 | ▪ காலி மற்றும் கண்டி மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 21 இல் கித்துல் தொழிலில் ஈடுபடும் மக்களை ஒருங்கிணைத்து, கித்துல் தொழிலின் முன்னேற்றத்திற்காக மாவட்ட மட்டத்தில் சமூக அடிப்படை சங்கங்களை நிறுவுதல்.<br>▪ நௌுவ மற்றும் தவலம பிரதேச செயலாளர் பிரிவுகள் இரண்டிலும் அடையாளம் காணப்பட்ட நூறுக்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களின் பங்கேற்புடன் சமூக அடிப்படை பொறிமுறையை செயல்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| கித்துல் உற்பத்தியாளர்களுக்கு அடையாளத்தை வழங்குவதற்காக அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல். | 2.00 | - | ▪ பெறப்பட்ட நிதி திட்டங்களைத் தொடங்குவதற்கு போதுமானதாக இல்லை. |
| வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் வர்த்தக திணைக்களம் இணைந்து இலங்கை தூதரக அலுவலகங்கள் மூலம் சர்வதேச சந்தை முன்னேற்றத்திற்காக கித்துல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் விவரங்கள் உள்ளடங்கிய கையேட்டை தயாரித்தல். | 2.50 | - | ▪ இது 3/2022 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| கித்துல் தொழில் முனைவோர் 20 பேருக்கு சர்வதேச சந்தைக்கான தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி முன்னேற்றத்திற்கு GMP மற்றும் SLSI சான்றிதழ்களைப் பெறுவதற்கு நிதி உதவி வழங்குதல். | 3.00 | | ▪ கித்துல் தொழில் முனைவோர் 8 பேருக்கு GMP சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.<br>▪ கித்துல் பாணி மற்றும் சர்க்கரை செயல்முறைக்கான நடைமுறைகள் தொகுப்பை தயாரிக்குமாறு இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சர்வதேச தரத்திலான கித்துல் விற்பனை நிலையத்தை நிறுவுதல். | 5.00 | - | ▪ இது 3/2022 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை |
| கித்துல் கட்டுபவர்களுக்கு பாதுகாப்பு கருவிகளை வழங்குதல்.<br>• ரீசார்ஜ் செய்யக்கூடிய ஹெட்லேம்ப்கள்<br>• தொப்பிகள்<br>• மழைக்கோட்டுகள்<br>• வாளிகள்<br>• பாதுகாப்பு காலணிகள் | 0.20 | 0.17 | ▪ பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. |
| கித்துல் அபிவிருத்தி சபைக்கான மூலதன மற்றும் மீண்டும் நிகழும் செலவுகள் | 24.66 | 11.63 | ▪ செலவினங்களின் அடிப்படையில் மாதாந்த நிதி ஒதுக்கப்படுகிறது. |

## 7.5 கித்துல் சர்க்கரை மற்றும் பாணி ஏற்றுமதி



உரு 4 :- கித்துல் சர்க்கரை



உரு 5 :- கித்துல் பாணி

| கித்துல் உற்பத்தியின் ஏற்றுமதி பெறுமானம் (கி.கி.) | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
| சர்க்கரை | 157,909 | 126,369 | 219,285 | 248,915 | 190,585 |
| பாணி | 93,162 | 60,221 | 109,024 | 150,219 | 68,323 |
| மொத்தம் | 251,071 | 186,590 | 328,309 | 399,134 | 258,908 |

**அட்டவணை 1 :- கித்துல் உற்பத்தியின் ஏற்றுமதி பெறுமானம் (கி.கி.)**

| கித்துல் உற்பத்தியின் ஏற்றுமதி அளவு (ரூ.மி) | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
| சர்க்கரை | 63.61 | 55.00 | 103.90 | 150.02 | 158.44 |
| பாணி | 62.06 | 38.95 | 70.80 | 106.09 | 84.42 |
| மொத்தம் | 125.67 | 93.95 | 174.70 | 256.11 | 242.86 |

**அட்டவணை 2 :- கித்துல் உற்பத்தியின் ஏற்றுமதி அளவு (ரூ.மி)**




குத்துவரிபடம் *1 :- :-* **2018 முதல் 2022 வரை கித்துல் உற்பத்தியின் ஏற்றுமதி பெறுமானம் (கி.கி.)**




குத்துவரிபடம் *2 :-* கித்துல் உற்பத்திகளின் ஏற்றுமதிப் அளவு (ரு.மி)

*ஆதாரம் :* ஏற்றுமதி அபிவிருத்தி சபை

| ஏற்றுமதி வருமான இலக்கு (ரூ .மி) | | | | |
|---|---|---|---|---|
| | **2022** | **2023** | **2024** | **2025** |
| ஆண்டு வருமானம் | 200 | 400 | 450 | 500 |

**அட்டவணை 3 :- ஏற்றுமதி வருமான இலக்கு (ரூ.மி)**




**குத்துவரிபடம் 3 : வருடாந்த ஏற்றுமதி வருமானம்**

***ஆதாரம் :*** **கித்துல் அபிவிருத்தி சபை**

## 08. கித்துல் அபிவிருத்தி சபையினால் 2022 ஆம் ஆண்டு பூர்த்தி செய்த கருத்திட்டங்கள்

### 8.1 மூலோபாயத் திட்டங்களைத் தயாரித்தல்.

கித்துல் அபிவிருத்தி சபை 2021 ஆம் ஆண்டில் சட்டப்பூர்வ நிறுவனமாக நிறுவப்பட்டது. அதை நிறுவுவதற்கு முன்னர் தோட்டத்துறை தொடர்பான பல்வேறு அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்கள் கித்துல் துறையின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தன.

அக்காலத்தில் அரசாங்கம் கித்துல் அபிவிருத்தி சபையின் நிலையை உயர்த்தி சட்டப்பூர்வ நிறுவனமாகவும், தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சின் இணைந்த நிறுவனமாகவும் மாற்றி புதிதாக நிறுவியது. இராஜாங்க அமைச்சின் கீழ் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கித்துல் அபிவிருத்தி சபை தனது செயல்பாடுகளை நடத்துவதற்கு விரிவான செயல்திட்டத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளது.

வளவாளர்களின் ஒத்துழைப்பு, அவர்களின் உதவி மற்றும் பங்கேற்புடன் இந்த செயல்திட்டத்தை தயாரிப்பதற்கான பட்டறை நடத்துவதற்கு ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இந்த பட்டறை 2022 ஜனவரி 13 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நடத்தப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் அறிவுசார்ந்தவர்கள் , நிபுணர்கள் மற்றும் தரப்பினர்கள், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் உட்பட, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சபரகமுவ பல்கலைக்கழகம், தேசிய கைத்தொழில் சபை மற்றும் கித்துல் துறையின் தொழில் முனைவோர் செயல்திட்டத்தை தயாரிப்பதில் தீவிரமாக பங்களிக்க அழைக்கப்பட்டனர்.

கித்துல் அபிவிருத்தி சபைக்கு வலுவான மற்றும் மூலோபாய செயல்திட்டத்தை தயாரிப்பதற்காக பங்கேற்பாளர்களின் அறிவு, நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவைப் பயன்படுத்துவது இந்த பட்டறையின் நோக்கமாக இருந்தது. பல்வேறு அறிஞர்கள், நிபுணர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பட்டறை இலக்கு வைக்கப்பட்டது. பட்டறைக்கு பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்கள், பார்வைகள், மற்றும் கித்துல் தொழில்துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

பங்குதாரர்கள் மதிப்புமிக்க பங்களிப்பு மற்றும் வழிகாட்டுதலை வழங்கினர். செயல்திட்டத்தை வடிவமைப்பதற்கு அவர்களின் நிபுணத்துவம் மற்றும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், பட்டறை ஊடாடும் அமர்வுகளுக்கு மேடையை வழங்கியது. கூட்டு பிரச்சினை தீர்வு மற்றும் குழு விவாதங்கள், அனைத்து பங்கேற்பாளர்களின் செயலில் பங்கேற்பை உறுதி செய்தது, பங்கேற்பாளர்களின் மதிப்புமிக்க கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்க வாய்ப்பளித்தது. பட்டறையின் விளைவாக கித்துல் அபிவிருத்தி சபை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நன்கு வரையறுக்கப்பட்ட செயல்திட்டத்தை வெற்றிகரமாக தயாரித்தது. இந்த விரிவான திட்டத்தில் தெளிவான குறிக்கோள்கள் அடங்கியிருந்தன.

இந்த பட்டறையின் போது கித்துல் தொழில்துறையின் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT) பற்றிய பகுப்பாய்வைப் பயன்படுத்துதல் மற்றும் அதன் முடிவுகளை கித்துல் தொழில் கைவினைஞர்கள் மற்றும் அத்தொழிலுக்கு பொறுப்பான அரச அமைப்பின் எதிர்கால வளர்ச்சிக்கு பயன்படுத்தக்கூடிய வழிமுறை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. பங்கேற்பாளர்கள் SWOT பகுப்பாய்வின் பல்வேறு அம்சங்களை தீவிரமாக விவாதித்தனர், கித்துல் சூழலில் அதன் நடைமுறை பயன்பாடு பற்றிய விரிவான புரிதலைப் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த பகுப்பாய்வின் அடிப்படையில் கட்டமைத்து, கண்டுபிடிப்புகளை செய்யும் முறையைச் சுற்றி விவாதிக்கப்பட்டது.

பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT) பகுப்பாய்வை கித்துல் தொழில் கைவினைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், தொழில்துறை மேற்பார்வைக்கு பொறுப்பான அமைப்பின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்துவது இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாக இருந்தது.

பட்டறையில் பங்கேற்பாளர்களின் பலங்களை அடையாளம் காண்பதன் மூலம் கித்துல் உற்பத்திகளின் ஊட்டச்சத்து நன்மைகளை மேம்படுத்துதல் அல்லது ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துதல் போன்ற பயன்படுத்தக்கூடிய உத்திகள் ஆராயப்பட்டன, மேலும் அவர்களின் பலவீனங்களை குறைப்பதற்கான திட்டங்கள் அங்கு தயாரிக்கப்பட்டன.



உரு 6 :-செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்.

## 8.2 மூலோபாயத் திட்டத்தை கௌரவ ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தல்..

கித்துல் மேம்பாட்டு வாரியம் 2021 ஆம் ஆண்டு ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக நிறுவப்பட்டது. அது நிறுவப்படுவதற்கு முன்பு, கித்துல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தொடர்புடைய துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டன. வாரியம் நிறுவப்பட்ட பிறகு எதிர்கொள்ளப்பட்ட முதன்மையான சவால், வாரியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டும் ஒரு மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதாகும். அதன்படி, வாரியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை விவரிக்கும் ஒரு மூலோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டு, 2022 ஜனவரி 17 ஆம் தேதி காலியில் உள்ள ஹியாரே நீர்த்தேக்கத்தில் 500 க்கும் மேற்பட்ட கித்துல் தொழில்முனைவோரின் பங்கேற்புடன் அதிமேதகு ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.



உரு 7 :- கித்துல் சார்ந்த உற்பத்தி.




உரு 8 :- கித்துல் சார்ந்த உற்பத்தி.



உரு 9 :- கித்துல் சார்ந்த உற்பத்தி.




உரு 10 :- கித்துல் சார்ந்த உற்பத்தி.



உரு 11 :- கித்துல் சார்ந்த உற்பத்தி.

250 கித்துல் தொழில் முனைவோர் பங்கேற்புடன் கித்துல் தொழிலின் வளர்ச்சிக்கான சபையின் மூலோபாய வழிகாட்டுதல் அடங்கிய புதிய மூலோபாய திட்டம் கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது, மேலும் கித்துல் தொழிலின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் குறித்து கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலையீட்டின் மூலம் கண்காணிக்கப்பட்டது.

கித்துல் தொழிலின் சிக்கலான செயல்முறைகள் பற்றிய நேரடி புரிதலை பெறுவதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது, மேலும் அவரது வருகை மற்றும் செயல்முறை தலையீடு இந்த பாரம்பரிய மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியமான துறைக்கு வழங்கப்படும் ஆதரவிற்கு சாட்சியமாக இருந்தது. மேலும் இந்த விழாவில் கித்துல் துறையின் முன்னேற்றம் மற்றும் புதுமைகளை காட்சிப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டது. தொழிலின் வளர்ச்சி மற்றும் நிலையான அபிவிருத்திக்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துதல், கித்துல் தொழிலின் முக்கியத்துவம் மற்றும் அதன் எதிர்கால எதிர்பார்ப்புகளை மேலும் உறுதிப்படுத்துவதுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான கௌரவ ஜனாதிபதி அவர்களின் பங்கேற்பு நிகழ்ச்சிக்கு தனிச்சிறப்பான பரிமாணத்தை சேர்த்தது. பிராந்தியத்தில் கித்துல் தொழிலை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பு, கருத்துப் பரிமாற்றம் மற்றும் அர்ப்பணிப்பை வலுப்படுத்த இது விலைமதிப்பற்ற வாய்ப்பாக இருந்தது.

## கித்துல் பூ வெட்டுதல்:

கித்துல் சார்ந்த உற்பத்தியின் அத்தியாவசிய அம்சமான கித்துல் பூ வெட்டுதல் செயல்முறை கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நடவடிக்கை உற்பத்தி சங்கிலியின் தொடக்க நிலையை காட்சிப்படுத்துவதுடன் நிலையான அறுவடை முறைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

கித்துல் பாணி உற்பத்தியை கண்காணித்தல்:

கித்துல் சார்ந்த பல்வேறு உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருளான தெளிவான திரவத்தின் மூலம் கித்துல் பாணி உற்பத்தி ஜனாதிபதி அவர்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

கித்துல் உற்பத்தி செயல்முறை குறித்த புரிதலைப் பெற்றுக்கொண்டு கித்துல் உற்பத்தி நடைபெறும் இடங்களை கௌரவ ஜனாதிபதி அவர்கள் ஆராய்ந்தார். இதற்கு மேலதிகமாக, கித்துல் தொழில்துறையில் உற்பத்தி திறன் மற்றும் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை பார்வையிட அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. கித்துல் மரத்திலிருந்து இறுதி உற்பத்தி வரை கித்துல் தொழில்துறையின் பல்வேறு நிலைகள் குறித்த விரிவான புரிதலைப் பெற இந்த கண்காணிப்புகள் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு உதவியது.

அதைத் தொடர்ந்து கித்துல் தொழில்துறையின் எதிர்கால பயணத்தை காட்டும் குறுகிய ஆவணப்படம் காணொளி நிகழ்ச்சி கித்துல் அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்டது.

கித்துல் உற்பத்திகளை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வதன் மூலம் பயன்படுத்தக்கூடிய பொருளாதார வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சி எதிர்பார்ப்புகளை வலியுறுத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது. ஆவணப்படத்தை வழங்குவதன் மூலம் கித்துல் தொழில்துறையின் எதிர்கால பயணம்

குறித்த புரிதலை வழங்க முடிந்தது. உலகளாவிய சந்தையில் கித்துல் தேவைக்கு ஏற்ற உற்பத்தியாக நிறுவுவதற்கான மூலோபாய திட்டங்கள் மற்றும் பயனுள்ள சந்தைப்படுத்தல் உத்திகளின் முக்கியத்துவத்தை அதன் மூலம் காட்சிப்படுத்தப்பட்டது, இறுதியில் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் கித்துல் தொழில் முனைவோரை வலுப்படுத்துவதற்கும் பங்களிப்பது காணொளி அணுகுமுறையின் மூலம் காட்டப்பட்டது.

**அதன்படி கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் முக்கியமான பணிகள் பல நிறைவேற்றப்பட்டன.**

- கித்துல் அபிவிருத்தி சபையின் மூலோபாய திட்டத்தை அங்கீகரித்தல்: கித்துல் தொழில்துறையின் வளர்ச்சிக்கான மூலோபாய அடித்தளங்கள் மற்றும் இலக்குகளை குறிப்பிட்டு கித்துல் அபிவிருத்தி சபையின் மூலோபாய திட்டம் கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் அங்கீகரிக்கப்பட்டது. கித்துல் துறையில் நிலையான வளர்ச்சி மற்றும் பொருளாதார வலுப்படுத்தலை மேம்படுத்துவதற்கான சபையின் அர்ப்பணிப்பு இந்த சமர்ப்பிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

- கித்துல் பாணிக்கு தரநிலையை ஏற்படுத்துதல்: குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக, இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் கித்துல் பாணிக்கு குறிப்பிட்ட தரநிலையை தயாரித்தது. இலங்கையில் கித்துல் பாணிக்கு முதல் முறையாக தரப்படுத்தப்பட்ட வழிகாட்டுதலை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தரநிலை அடங்கிய அறிவிப்பு கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் அங்கீகரிக்கப்பட்டது. கித்துல் பாகு உற்பத்திகளுக்கான தர உத்தரவாதத்தின் முக்கியத்துவம், போட்டித்தன்மையின் முக்கியத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தி தரநிலை அடங்கிய அறிவிப்பும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் வழங்கப்பட்டது

- பெருந்தோட்டத்துறை அமைச்சின் கீழ் உள்ள பெருந்தோட்ட தொழில் பயிற்சி நிறுவனம் (NIPM) கித்துல் மரம் ஏறும் பயிற்சி பெற்ற நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியது. கித்துல் பயிரிடுதல் மற்றும் உற்பத்தி துறையில் அவர்களின் திறன்கள் மற்றும் அறிவு குறித்த இந்த மதிப்பீடுகள் மூலம் தொழில்துறையில் நிபுணத்துவம் மற்றும் தொழில்முறை தன்மையை உயர்த்துவதற்கான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டது.

- தொழில்நுட்ப உபகரண தொகுப்புகளை வழங்குதல்: கித்துல் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு மேலும் உதவுவதற்கான வழிமுறையாக தொழில்நுட்ப உபகரண தொகுப்புகள் வழங்கப்பட்டன. அவர்களின் உற்பத்தி திறன்களை மேம்படுத்துதல், புதுமைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் வணிகங்களில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கு வசதி செய்வது இதற்கான நோக்கமாகும்.

- நினைவுச் சின்னம் வழங்குதல்: நினைவுச் சின்னம் வழங்குவதன் மூலம் நிகழ்ச்சி நிறைவுற்றது.

  சௌபாக்யா உற்பத்தி கிராமத்தை நிறுவுவதன் மூலம் பெறப்பட்ட இந்த நினைவுச்சின்னம் கித்துல் தொழில்துறையின் முன்னேற்றம், நிலையான அபிவிருத்தி

மற்றும் பங்கேற்பாளர்கள் மத்தியில் பெருமை மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிகள் மற்றும் வெற்றிகளை அடையாளப்படுத்தியது.

கௌரவ ஜனாதிபதி அவர்களால் செய்யப்பட்ட இந்த நடவடிக்கைகள் கித்துல் தொழில்துறைக்கான அவரது செயல்முறை பங்களிப்பு மற்றும் ஆதரவை காட்சிப்படுத்தியது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதன் வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் அங்கீகாரத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.



**உரு 12 :-கித்துல் மரத்தால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள்**

## 8.3 குடிசைக் கைத்தொழிலுக்காக பாதுகாப்பு உபகரணக் கருவிகளை வழங்குதல்.

கித்துல் பூக்கட்டும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அந்த தொழிலை வெற்றிகரமாக நடத்திச் செல்ல உதவும் உபகரண தொகுப்புகளை விநியோகிப்பது இந்த திட்டத்தின் நோக்கமாகும். கௌரவ பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் 2022.09.29 ஆம் திகதி அந்த தொழில் நடைபெறும் பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் பூக்கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு உபகரண தொகுப்புகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்த எங்கள் சபை தலையிட்டது.

2022 பிப்ரவரி 17 ஆம் திகதி காலி ஹியாரேவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கௌரவ ஜனாதிபதி அவர்களால் அக்மீமன பிரதேச செயலாளருக்கு அந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த உபகரணங்களை விநியோகிப்பதற்காக காலி மாவட்ட செயலகங்களுக்குச் சொந்தமான பின்வரும் பிரதேச செயலாளர் அலுவலகங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகங்களிலிருந்து பெறப்பட்ட கோரிக்கையின்படி பின்வரும் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பட்டியல் பின்வருமாறு:

| பிரதேச செயலகம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| எல்பிட்டிய | 61 |
| வெலிவிட்டிய திவிதுர | 04 |
| நியாகம | 45 |
| வதுரம்ப | 02 |
| நாகொட | 19 |
| தவலம | 42 |
| நெலுவ | 70 |
| மொத்தம் | 243 |

பிரதேச செயலகங்களுக்குத் தேவையான வளங்கள் மற்றும் ஆதரவை வழங்குவதற்கும், விநியோக நிகழ்ச்சித் திட்டத்தை சுமூகமாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும் சபை அர்ப்பணிப்புடன் செயற்பட்டது..

வலயத்தின் மொத்த பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 7 ஆகும். எவ்வாறாயினும், போக்குவரத்து தொடர்பான சவால்களைக் கருத்தில் கொள்ளும்போது தனித்தனி நிகழ்ச்சிகள் 07ஐ ஒழுங்கமைத்து தேவையான வளங்களை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை 04 இடங்களில் நடத்த சபை முடிவு செய்துள்ளது. இந்த அணுகுமுறையை செயல்படுத்துவதன் மூலம் விநியோக செயல்முறையை ஒழுங்குபடுத்துதல், செலவைக் குறைத்தல் மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்வது சபையின் நோக்கமாகும். இந்த முடிவு பயனாளிகளின் நலன் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் திறனை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்பட்டது. பயனாளிகளின் வசதிக்காக பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திறமையாக ஒழுங்கமைத்தல் மற்றும் வளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை சபை அடையாளம் கண்டுள்ளது. எனவே 07 பிரதேச செயலகங்களைச் சென்றடைவதில் ஏற்படும் விநியோக சவால்களைக் குறைக்க இந்த 04 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

## 8.4 கித்துல் விவசாய சங்கங்களை அமைத்தல்.

தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மாறிவரும் நுகர்வோர் விருப்பத்தினால் தொழில்துறைகளில் மாற்றமும் நிலையான வளர்ச்சியும் இந்த யுகத்தில் நிகழ்ந்துள்ளன. பாரம்பரிய கிராமப்புற பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கித்துல் தொழில் இப்போது குறிப்பிடத்தக்க மாற்ற செயல்முறைக்கு தயாராக உள்ளது. மாற்றங்கள் மற்றும் புதுமைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கித்துல் தொழிலை அதன் தனித்துவமான மற்றும் உண்மையான மதிப்புகளை பாதுகாக்கும் நவீனமயமாக்கப்பட்ட மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட துறையாக மாற்றும் பணியை கித்துல் அபிவிருத்தி சபை ஏற்றுக்கொண்டுள்ளது. அதேபோல், இலங்கை பாரம்பரியங்கள் மற்றும் பாரம்பரியத்தில்

ஆழமாக வேரூன்றிய கித்துல் தொழில், கித்துல் மரத்தின் சாற்றிலிருந்து பெறப்பட்ட சிறந்த உற்பத்திகளுக்காக நீண்ட காலமாக மதிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த தொழிலில் உள்ள வரம்புக்குட்பட்ட வெளிப்பாடு மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டின் குறைபாடு காரணமாக இந்த தொழிலின் சாத்தியக்கூறு பெருமளவில் பயன்படுத்தப்படவில்லை. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களைப் பயன்படுத்தி, தொழிலின் முழு சாத்தியக்கூறுகளையும் பயன்படுத்தி, அதை உலகளாவிய நிலைக்கு உயர்த்துவது இந்த சபையின் நோக்கமாகும். இந்த மாற்ற மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் அதற்காக திறன், தரம் மற்றும் சந்தை அணுகலை உயர்த்துவதற்கும் தொழில்நுட்பம் நிறைவேற்றும் முக்கிய பங்கை இந்த சபை அடையாளம் கண்டுள்ளது.. மூலோபாய கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பு மூலம், திறனை மேம்படுத்துவதற்கு தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி கைவினை முறைகளை அறிமுகப்படுத்த இந்த சபை எதிர்பார்க்கிறது.

கைமுறை செயற்பாட்டைக் குறைத்தல், தானியங்குமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் தீர்வுகளைப் பயன்படுத்தி, கித்துல் உற்பத்திகளின் நம்பகத்தன்மை மற்றும் தனித்தன்மையை பராமரித்து விலைகளை ஒழுங்குபடுத்த இந்த சபை செயல்பட உள்ளது. கித்துல் உற்பத்திகளின் சாரத்தை பாதுகாக்கும் அதேவேளை உலகம் முழுவதும் நுகர்வோரின் வளர்ந்து வரும் ரசனைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் பன்முகப்படுத்தப்பட்ட தொழிலை உருவாக்குவது இந்த சபையின் எதிர்பார்ப்பாகும்.

முழுமையான சந்தை ஆய்வுகளை நடத்துவதன் மூலமும் துறையின் நிபுணர்களுடன் இணைவதன் மூலமும், புதிய உற்பத்தி வாய்ப்புகளை அடையாளம் கண்டு சுவையான உணவுகளிலிருந்து கித்துல் வழித்தோன்றல்களின் புதுமையான பயன்பாடுகளை ஆராய்வோம். உணவுப் பொருட்கள், இயற்கை சுவையூட்டிகள் மற்றும் மேலதிக ஆரோக்கியம்

, சாத்தியக்கூறுகள் எல்லையற்றவை. எங்கள் மாற்று பயணம் நவீனமயமாக்கல் மற்றும் பன்முகப்படுத்தலை தாண்டி செல்கிறது. அது கித்துல் தொழிலுடன் தொடர்புடைய கிராமப்புற சமூகங்களை வலுப்படுத்துவது வரை பரவுகிறது. விரைவாக மாறிவரும் உலகில் வளர்வதற்கு தேவையான அறிவு மற்றும் கருவிகளுடன் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களை தயார்படுத்த விரிவான பயிற்சி திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டிற்கு இந்த சபை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோரை வளர்ப்பது மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகளை உறுதிசெய்வதன் மூலம் கித்துல் தொழிலின் மதிப்பு சங்கிலியுடன் தொடர்புடையவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது இந்த சபையின் நோக்கமாகும். நவீன தொழில்நுட்பத்தை தழுவி, புதுமைகளை வளர்ப்பதன் மூலமும் கிராமப்புற சமூகத்தை வலுப்படுத்துவதன் மூலமும் கித்துல் தொழிலை அதன் சிறப்பு உற்பத்திகள் மற்றும் நம்பகத்தன்மைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக புகழ்பெற்ற உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் புகழ்பெற்ற துறையாக மாற்ற இந்த சபை எதிர்பார்க்கிறது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான செயல்படுத்தல் திட்டத்தில், மேலே குறிப்பிட்ட கித்துல் விவசாயிகள் சங்கங்களை நிறுவுதல் மற்றும் வலுப்படுத்துதல் நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்கு 1 மில்லியன் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட திட்டத்தின் கீழ் கித்துல் உற்பத்தியாளர்களை ஒழுங்கமைத்தல், மனித திறன் மேம்பாடு மற்றும் சமூக வலுப்படுத்தலில் கவனம் செலுத்தி விரிவான அடித்தளத்தை செயல்படுத்துவதற்கான

அடித்தளம் தயாரிக்கப்பட்டது. இந்த திட்டம் இலங்கையில் கித்துல் தொழில் அதிகமாக நிலவும் 11 மாவட்டங்கள் முழுவதும் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. முன்னதாகவும் செயல்பட்டிருந்தாலும், கித்துல் தொழிலில் ஈடுபடும் நபர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் செயல்படும் சமூக அமைப்பில், தற்போதைய நிலையிலிருந்து தெரியவருவது சங்க முறை செயலற்று இருப்பதாகும்.

